“கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) கூட்டிணைக்கப் பட்ட குழுவாதலும் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் என்பதுடனும், பொது இலச்சினை யொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அதன் விருப்பப் படி அதனை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் உடைய தாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) இலங்கை சகல அழகியற்கலை மற்றும் மரபு ரீதியான கலைகள் போன்றவற்றை அறிந்து அவைகளை விருத்தி செய்தல், திரையரங்குகள், சர்வதேசத்திற்கு எமது கலைகளை அறிமுகப்படுத்தி உள்ளூர் கலைஞர்களின் பொருளாதார மற்றும் சமூகத் தேவைகளை அபிவிருத்தி செய்தல்;

(ஆ) இலங்கையில் பெண்கள், சிறுவர்கள் மத்தியில் சமூக சேவைத் திட்டங்களை ஊக்கப்படுத்த சமூக கலாசார நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் ;

(இ) முதியோர் மத்தியில் சமூக சேவை உணர்வை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்தல் ;

(ஈ) உயர்கல்வி நிறுவனங்களை அபிவிருத்தி செய்தல், உயர்கல்வித் துறையை அபிவிருத்தி செய்வதற்காக ஆராய்ச்சிகள் மற்றும் புலமைப்பரிசில்கள் போன்ற வற்றிற்கு உதவுதல் ;

(உ) சிங்கள தமிழ் ஆங்கில மொழிகள் போன்றவற்றைக் கற்பதற்கு உதவியளித்தல் மற்றும் தகவல் தொழில் நுட்பத்தை விருத்தி செய்தலும் தகவல் தொடர்பு மத்திய நிலையங்களை நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் நிறுவுதலும் ;

(ஊ) உச்ச லாபத்தைப் பெறுவதற்காக நவீன தொழில் நுட்பத்தை உபயோகித்து விவசாயம், பெருந்தோட்டத் துறை மற்றும் மீன்பிடித்துறையை விருத்தி செய்தல் ;

(எ) கிராமிய மற்றும் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள இயற்கை வளங்களை உபயோகித்து அப்பகுதிகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்தல் ;

(ஏ) வீடு, காணியற்றோருக்கு அவைகளை வழங்குதல், வசதியற்ற பாடசாலைகளுக்குத் தேவையான கட்டிடங் களை அமைத்தல், பாதை புனரமைப்பு, மின்சார வசதிகள், சுகாதார சேவைகள் போன்றவற்றுக்கு உதவுதல் ;

(ஐ) மனித நேயம், விளையாட்டு, வரலாறு மற்றும் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தல் ;

(ஒ) இலங்கையில் வாழும் பல்வேறுபட்ட இனங்களுக் கிடையே ஒற்றுமையையும் அவர்களைப் பலப்படுத்தும் நோக்குடன் சமூக மற்றும் பண்பாட்டுச் செயற்பாடுகளை ஊக்குவித்தல் ;

(ஓ) மனித உரிமை, மனிதாபிமானம், அடிப்படைச் சுதந்திரம், சனநாயகம் போன்றவற்றை விருத்தி செய்தலும் பாதுகாத்தலும் ;

(ஔ) நிறுவனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கான அவசியமான நிதி உதவிகளையும் ஏனைய அவசிய மான உதவிகளையும் வழங்கல் ;

(க) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்தும் நோக்கு டன் கண்காட்சிக்காக கருத்தரங்குகள், போதனைகள், கலந்துரையாடல்கள், வேலைத்திட்டங்கள், விவாதங் கள், தேசிய வெளிநாட்டுச் சுற்றுலாக்கள் போன்றவற்றை ஏற்பாடு செய்தலும் அதற்கு உதவுதலும், புத்தகங்கள், சஞ்சிகைகள், வார இதழ்கள் வெளியிடுதலும் விநி யோகித்தலும் ;

